பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව
**Chief Secretary's Secretariat, Northern Provincial Council**
மாகாணத்திறைசேரி
පළාත් භාණ්ඩාගාරය
**Provincial Treasury**

மாகாண சபை வளாகம்,
A9 வீதி, கைதடி,
யாழ்ப்பாணம்.

පළාත් සභාව සංකීර්ණය,
A9 පාර, කයිදඩි,
යාපනය.

Provincial Council Complex
A9 Road, Kaithady,
Jaffna.

My No:- NP/09/A&P/06/02/Pro-CoApL/2021

2021/11/...

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்,

**சமூக அடிப்படை நிறுவனங்களுக்கு நேரடி ஒப்பந்தங்களை வழங்கல் திட்டம்**
**(அரச நிதிச்சுற்றுநிருப இல. 01/2021)**

மேற்படி விடயம் தொடர்பாக,

அரச பெறுகை நடைமுறைகளில் ஈடுபடுகின்ற வடமாகாண சபையின் கீழ் இயங்குகின்ற அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகள் தங்களது பெறுகைகள் மற்றும் சேவைகளில் சமூக அடிப்படை நிறுவனங்களுக்கு நேரடி ஒப்பந்தங்களை வழங்குகின்ற பொழுது கருத்திற் கொள்ளப்படவேண்டிய நிபந்தனைகள் மற்றும் பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள் தொடர்பாக 2021.09.29 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தை கருத்திற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், அமைச்சுக்கள் / திணைக்களங்கள், பிராந்திய மற்றும் பிரதேச நிறுவனங்கள் இந்நடைமுறையின் கீழ் பெறுகை முறையினை செயற்படுத்தும்பொழுது கீழ்க்காட்டப்பட்டவாறு பெறுகை அதிகார எல்லையில் அனுமதிகளை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

| | Level of Procurement authority | Approving authority |
|---|---|---|
| 1 | மாகாண அமைச்சு பெறுகை குழு | பிரதம செயலாளர் |
| 2 | திணைக்கள பெறுகை குழு, திட்ட பெறுகை குழு | அமைச்சின் செயலாளர் |
| 3 | பிராந்திய பெறுகை குழு | திணைக்களத் தலைவர் |
| 4 | பிரதேச பெறுகை குழு | |

எஸ்.எம்.சமன் பந்துலசேன

பிரதம செயலாளர்

வட மாகாணம்

பிரதம செயலாளர்
ප්‍රධාන ලේකම්
Chief Secretary
Tel : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
E-mail: chiefsecnpc@gmail.com

பிரதிப்பிரதம செயலாளர்
නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම්
Deputy Chief Secretary
Tel : 021 222 0850 (Dir)
: 021 222 0854(Gen)
Fax : 021 222 0853
E-mail: npctreasury@gmail.com

මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: PFD/PMD/Cir/2021/01
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2021.09.29

**அரச நிதிச் சுற்றுநிருப இல. 01/2021**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், அதிகாரிகள் மற்றும் அரச உடமை தொழில்முயற்சிகள் என்பவற்றின் தலைவர்கள் அனைவருக்கும்

## சமூக அடிப்படை நிறுவனங்களுக்கு நேரடி ஒப்பந்தங்களை வழங்கல் திட்டம்

பெறுகைகள் மற்றும் சேவைகளில் சமூகப் பங்களிப்புக்கான வழிகாட்டல்களை வழங்குகின்ற அரசாங்க பெறுகை வழிகாட்டல்கள் – 2016 இன் பிரிவு 3.9 மற்றும் 3.9.1 தொடர்பாக உங்களது அவதானம் கோரப்படுகின்றது.

2. அதன்படி, 2021.09.29 ஆந் திகதியிலிருந்து சமூக அடிப்படை நிறுவனங்களுக்கு நேரடி ஒப்பந்தங்களை வழங்குவதற்கான நிபந்தனைகள் மற்றும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

2.1 கீழே பந்தி 2.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை சரிபார்த்ததன் பின்னர் திணைக்களத் தலைவர் மற்றும் அப்பகுதியின் பிரதேச செயலாளரால் நியமிக்கப்பட்ட இரண்டு பிரதிநிதிகள் அடங்கிய மூன்று பேர் கொண்ட குழுவால் பின்வரும் சமூக அடிப்படை நிறுவனங்களுக்கு நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்படலாம்.

i. சமுர்த்தி சமூக அடிப்படை நிறுவனங்கள் / சமுர்த்தி பிராந்திய நிறுவனங்கள்
ii. பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்
iii. கூட்டுறவு ஊழியர் சங்கங்கள் (ஊழிய சேவைகளுக்கு மாத்திரம்)
iv. கிராமிய அபிவிருத்தி சங்கங்கள்
v. பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள் (தொடர்புடைய பாடசாலை வளாகத்திற்குள் மாத்திரம் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது)
vi. பதிவுசெய்யப்பட்ட விவசாயிகளின் சங்கங்கள்

vii. சமூக அபிவிருத்திச் சங்கங்கள் (உள்ளூராட்சித் துறை அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு பங்களிப்புச் செய்யும் உள்ளூராட்சி ஆணையாளரின் கீழ் பதிவுசெய்யப்பட்ட சங்கங்கள்)
viii. கெமிதிரிய மக்கள் கம்பனிகள்
ix. கூட்டாதன முகாமைத்துவ அதிகாரசபையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கூட்டாதன முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள்.
x. ஆலய அபிவிருத்தி செயலாற்றுகைச் சங்கங்கள் (சொந்த ஆலயங்கள் மற்றும் தம்ம பாடசாலை வளாகங்களில் செயற்படுபவை)
xi. ஆலய நம்பிக்கையாளர் சபைகள் (சொந்த ஆலயங்கள் மற்றும் சமய பாடசாலை வளாகங்களில் செயற்படுபவை)
xii. சமூக சேவைகள் அமைச்சின் கீழ் இயங்கும் முதியோருக்கான தேசிய செயலகத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கிராமிய முதியோர் குழுக்கள் / சங்கங்கள்.
xiii. அமைச்சுக்கள், திணைக்களத் தலைவர்களினால் இனம் காணப்பட்ட சமூக நிறுவனங்கள் மற்றும் பிரதேச செயலாளர் திருப்திபடக்கூடிய பிரதேச செயலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள்.

2.2 இந்த திட்டத்தின் கீழ், ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் மீதிப் பகுதியின் திரட்டிய பெறுமதி மற்றும் முன்மொழியப்பட்ட ஒப்பந்தத்தின் மதிப்பு ரூபா 5 மில்லியனை விஞ்சக்கூடாது.

2.3 சமூக அடிப்படை நிறுவனங்கள் தொடர்பில் மேலே 2.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள குழு பின்வரும் ஆவணங்களை மதிப்பாய்வு செய்து பொருத்தமான சமூக அடிப்படை நிறுவனங்களுக்கு வேலை ஒப்பந்தங்களை வழங்க பரிந்துரைக்கலாம்.

i. சமுர்த்தி வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் அல்லது கிராமிய வங்கிகள் போன்ற நிதி நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட வங்கி கணக்குகள் மற்றும் கடன் வசதிகள் இருப்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்.

ii. இதேபோன்ற வேலைகளில் முந்தைய அனுபவத்தினை உறுதிப்படுத்தும் தொடர்புடைய சான்றிதழ்கள் அல்லது செய்த வேலைகள் மற்றும் அவற்றின் தரநிலைகள் தொடர்பான திருப்திகரமான சான்றுகள்.

iii. ஒரு வருடத்திற்கு முன்பு வழங்கப்பட்ட ஆனால் முழுமையடையாத ஒப்பந்தப் பணிகள் உள்ளடங்கலாக கடந்த வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தப் பணிகள் குறித்து சம்பந்தப்பட்ட சமூக அடிப்படை நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கைகள். (ஒப்பந்தத்தின் பெயர், இடம், வாடிக்கையாளர், ஒப்பந்த மதிப்பு மற்றும் ஒப்பந்தத்தின் தற்போதைய நிலை)

iv. குறித்த வேலை துணை ஒப்பந்தம் செய்யப்படமாட்டாது என்பதை உறுதிப்படுத்தி உரிய சமூக நிறுவனத்தால் வெளிப்படுத்தப்பட்ட அறிக்கை. (அவ்வாறு துணை ஒப்பந்தம் செய்யப்பட்டால், அத்தகைய சங்கங்கள் / அமைப்புகள் கருப்பு பட்டியலில் சேர்க்கப்படுதல் வேண்டும்)

2.4 ஒப்பந்தம் வழங்கப்படும் நேரத்தில், சம்பந்தப்பட்ட சமூக அடிப்படை நிறுவனம் மூன்று ஒப்பந்தங்களுக்கு மேல் ஈடுபடக்கூடாது. எவ்வாறாயினும், ஒரு பிரதேச செயலகத்தை உள்ளடக்கிய சமூக அடிப்படை நிறுவனமொன்றின் அதிகார

எல்லை முழு பிரதேச செயலகப் பிரிவிலும் உள்ளதுடன் பல்வேறு துறைகளில் ஒப்பந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான நிதி, தொழிலாளர் மற்றும் தொழில் முயற்சியாண்மை திறன்களைப் பெற்றுள்ளது என்று பிரதேச செயலாளர் தனிப்பட்ட முறையில் கருதுவாராயின், மாவட்டச் செயலாளரின் ஒப்புதலுடன் குறித்த நிறுவனத்திற்கு மூன்று ஒப்பந்தங்களுக்கு மேல் வழங்கலாம்.

2.5 ஒதுக்கப்படும் ஒப்பந்தம் சமூக அடிப்படை நிறுவனத்தின் / சங்கத்தின் அதிகார எல்லைக்குள் இருத்தல் வேண்டும்.

2.6 எந்தவொரு சமூக அடிப்படை நிறுவனமும் ஒப்பந்த உடன்படிக்கையினை மீறினால், அத்தகைய சங்கங்கள் / நிறுவனங்களை கருப்புப்பட்டியல் பதிவேட்டில் பதிவு செய்து கொள்முதல் நிறுவனத்தால் கருப்புப்பட்டியல் பதிவேடு புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.

2.7 திணைக்களத் தலைவர், சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளர் அல்லது பிரதேச செயலாளர் குறித்த சமூக அடிப்படை நிறுவனங்களின் ஒப்பந்தப் பணிகள் சரியான தராதரத்தின்படி நடைபெறுவதை உறுதி செய்யவேண்டும் என்பதுடன், கருத்திட்டற் செயற்படுத்துகைக் காலம் முழுவதும் தேவையான தொழில்நுட்ப மேற்பார்வை மேற்கொள்ளப்படுதலும் வேண்டும்.

2.8 கருத்திட்டப் பணியினை முன்னெடுக்கும் சமூக அடிப்படை நிறுவனத்தின் பெயர், அக்கருத்திட்டத்திற்கான அரசாங்க செலவினம், சமூக அடிப்படை நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தை வழங்கிய நிறுவனத்தின் பெயர், பயனாளர்களின் எண்ணிக்கை போன்ற விவரங்களைக் கொண்ட பெயர் பலகையொன்று அப்பிரதேச மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் காட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

3. சமூக அடிப்படை நிறுவனங்கள், அரசாங்க ஒப்பந்தங்களை வழங்குவதற்கான தகுதியை மதிப்பிடுவதற்கான அளவுகோலாக நிர்மாண தொழிற்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) கீழ் பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லை.

4. இது தொடர்பாக வெளியிடப்பட்ட 2012.01.05 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இல. 01/2012 இதன்மூலம் இரத்துச் செய்யப்படுவதுடன் இந்த சுற்றறிக்கை மட்டுமே நடைமுறையில் இருக்கும்.

5. இச்சுற்றறிக்கையில் மேலும் ஏதேனும் விளக்கங்கள் தேவைப்படுமாயின், அரச பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தினை 011-2484614 என்ற தொலபேசி இலக்கம் மூலம் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

**ஒப்பம்/எஸ். ஆர். ஆட்டிகல**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:
1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்